# மறுமையைக் குறித்த ஏழு உண்மைகள்!

இதுவரை கேட்டிராத

மிகச்சிறந்த செய்தி!

உங்களை பாதிக்கும் உண்மைகள்

“நாம் அனைவரும் பகிர்ந்துகொள்ளக்கூடிய ஒரே முடிவு மரணம்” என்று ஆப்பிள் நிறுவனத்தின் இணை ஸ்தாபகரும் மெகா மில்லியருமான ஸ்டீவ் ஜோப்ஸ் 2005ம் ஆண்டில் கூறினார். அவர் கூறியது எவ்வளவு பெரிய உண்மை என்று ஆறு வருடங்கள் கழித்து அவருடைய 56வது வயதில் காலத்திற்கு முன்னே அவர் மரித்தபோது நாம் அதைக் கண்டோம்.

உங்களுக்கு ஏற்கனவே தெரிந்தபிரகாரம், ஏழையோ பணக்காரனோ, பிரபலமானவரோ ஜனங்களால் மறக்கப்பட்டவரோ, ஒவ்வொரு மனிதனும் ஸ்டீவ் ஜோப்ஸ ின் முடிவையே இறுதியில் பகிர்ந்துகொள்ளப்போகிறோம். “ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறதுபோல” (1கொரி. 15:22) என்று வேதாகமம் கூறுகிறது. ஏதேனில் ஆதாமும் ஏவாளும் பாவம் செய்தபோது, அவர்களும் அவர்களுக்குப்பின் வந்த அனைவரும் மரணம் என்ற வாய்ப்பை சந்திப்பார்கள் என்று பார்க்கிறோம்.

ஆனால் நாம் மரித்தபின் வேறு ஏதாவது நடக்கிறதா? கல்லறைக்கு அப்பால் உள்ள வாழ்க்கையைக் குறித்து உங்கள் மனம் சிந்தித்ததுண்டா? நாம் நமது கல்லறைக்குப் போகும்போது, உண்மையாகவே என்ன நடக்கிறது என்று வேதம் கூறுகிறது? உடனே நாம் பரலோகத்திற்கோ நரகத்திற்கோ செல்வோமா அல்லது இரண்டிற்கும் இடைபட்ட பகுதியில் இருப்போமா?

## மறுமை குறித்த ஏழு உண்மைகள் இதோ!

### 1 மனிதர்கள் யாவரும் மண்தான்!

மறுமை வாழ்வைக் குறித்து தெரிந்துகொள்ள மனிதன் யார் மற்றும் அவன் யார் இல்லை என்னும் சத்தியத்தை புரிந்துகொள்வது முக்கியமாகும்.

நமது உடலில் ஆன்மாக்கள் தங்கியிருக்கின்றன என்னும் பிரபலமான நம்பிக்கைக்கு முரணான கருத்து என்னவெனில், நீங்களே ஓர் ஆத்துமாதான்; இதையே வேதாகமம் மாம்சமும்

இரத்தமுமுள்ள "ஜீவாத்துமா" என்று கூறுகிறது. "தேவனாகிய கர்த்தர் மனுஷனைப் பூமியின் மண்ணினாலே உருவாக்கி, ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார், மனுஷன் ஜீவாத்துமாவானான்" (ஆதி. 2:7).

இது கேட்பதற்கு வித்தியாசமாக இருக்கலாம், ஆனால் வேதம் இதில் தெளிவாக இருக்கிறது. ஏபிரெய பாஷையில், நீங்கள் ஒரு "நெப்பேஷ் (நெிநளா) – அதாவது ஒரு ஆத்துமா, உயிருள்ள ஜீவன்." இந்த ஆத்துமா மரிக்கும்போது, வேதத்தின் பிரகாரம் அது மண்ணாக மாறுகிறது.

ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு மிதந்து செல்லும் ஆத்துமா என்ற ஒன்று உங்களிடம் இல்லை.

## 2 மரணம் என்பது நித்திரையைப்போல!

கல்லறையின்மீது சு.ஐ.. என்ற எழுத்துக்களை நீங்கள் எப்போதாவது பார்த்ததுண்டா? சுஜீ என்றால் 'நிம்மதியாக உறங்கவும்' (சுநளவ பெ ீநயஉந) என்று அர்த்தம். மரணம் என்பது நித்திரை என்ற கருத்து எங்கிருந்து வந்தது? வேதத்திலிருந்து!

வேதத்தில், "நித்திரை" என்ற வார்த்தை அவ்வப்போது மரணத்தை விவரிப்பதற்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளது. "சாலொமோன் தன் பிதாக்களோடே நித்திரையடைந்து, தன் தகப்பனாகிய தாவீதின் நகரத்தில் அடக்கம்பண்ணப்பட்டான் (1 இராஜா. 11:43). இயேசுவின் நண்பனான லாசரு மரித்தபோது, இயேசு: "நம்முடைய சிநேகிதனாகிய லாசரு நித்திரையடைந்திருக்கிறான்" (யோவான் 11:11) என்றார். நித்திரைசெய்து இளைப்பாறுகிறதைக்குறித்துச் சொன்னாரென்று சீஷர்கள் நினைத்தார்கள் ஆனால் இயேசுவானவர் அவனுடைய மரணத்தைக் குறித்து அப்படி சொன்னார் (வ.13)

நீங்கள் தூங்கும்போது என்ன நடக்கிறது? உங்களைச் சுற்றி நடக்கும் அனைத்தைக் குறித்தும் நீங்கள்

தற்காலிகமாக சுயநினைவற்றவராக இருப்பீர்கள். இதுதான் உண்மையாகவே நாம் மரிக்கும்போதும் நடக்கிறது. எனவே, நீங்கள் உண்மையிலேயே விழித்திருக்கும்போது அல்லது பரலோகத்தில் சுயநினைவுடன் இருக்கும்போது நீங்கள் தூங்குகிறீர்கள் என்று கூறுவதில் எந்த அர்த்தமும் இல்லை, சரிதானே? லாசரு நித்திரையாயிருக்கிறான் என்ற இயேசு சொன்னபோது, அதே நேரத்தில் அவருடைய நண்பன் பரலோகத்தில் சுயநினைவுடன் இருக்கிறார் என்று அவரால் நம்பியிருக்கமுடியாதில்லையா? உண்மைதானே?

குறிப்பு: இயேசுவும், மரணத்தை நித்திரைக்கு ஒப்புமைப்படுத்தியிருக்கிறார், ஏனெனில் நீங்களும் மற்ற அனைவரும் ஒருநாள் அதிலிருந்து விழித்தெழுவீர்கள்!

## 3 மரணத்தைக் குறித்த வஞ்சனைகள்!

வரலாறு நெடுகிலும், நாம் மரித்தபின் என்ன நடக்கும் என்பதைக் குறித்து சாத்தான் மக்களை வஞ்சித்துக்கொண்டேயிருக்கிறான். முதன்முதலில் அவன் ஏவாளிடம், “நீங்கள் சாகவே சாவதில்லை” என்று பொய்சொன்னான் (**ஆதி. 3:4**). ஆனால் அதை அவள் புசிக்கும் நாளிலே அவள் மரிப்பாள் என்று தேவன் கூறியிருந்தார். ஆனால் அவள் மரித்தபிறகு வேறு ஒரு இடத்தில் அவள் தன் நித்தியத்தைக் கழிப்பாள் என்று அவர் கூறவில்லை (**ஆதி. 2:16, 17ஐ படிக்கவும்**).

அதுமுதல், வாழ்கை மரணத்தில் முடிவதில்லை என்னும் கருத்திற்குப் பலகோடிபேர் செவிசாய்க்க ஆரம்பித்துவிட்டார்கள். அது “ஆத்துமா அழியாது” என்ற கொள்கையோ அல்லது மறுஜென்மம் அல்லது மறுபிறப்பு என்னும் நம்பிக்கையோ, அவர்கள் மரித்தபின்னும் மரணத்தை எதிர்த்து உயிர்வாழ்கிறார்கள் என்று நம்புகிறார்கள்.

ஆனால் அது உண்மையல்ல! “நீ போகிற பாதாளத்திலே செய்கையும் வித்தையும் அறிவும் ஞானமும் இல்லையே”

(பிரசங்கி 9:10). வேலையோ அறிவோ வேறு எந்தச் செய்கையோ எதுவும் கல்லறையில் இல்லை என்றே வேதம் கூறுகிறது.

## 4 மரித்தவர்களுடன் உங்களால் தொடர்புகொள்ள முடியாது!

எனவேதான், அநேகர் வித்தியாசமான நம்பிக்கையில் இருந்தாலும், உங்களால் மரித்தவர்களுடன் பேசமுடிவதில்லை. மேலும், அவர்களுடன் பேச முற்படுவதையும்கூட வேதாகமம் தடைசெய்கிறது, “தன் மகனையாவது தன் மகளையாவது தீக்கடக்கப்பண்ணுகிறவனும், குறிசொல்லுகிறவனும், நாள்பார்க்கிறவனும், அஞ்சனம் பார்க்கிறவனும், சூனியக்காரனும், மந்திரவாதியும், சன்னதக்காரனும், மாயவித்தைக்காரனும், செத்தவர்களிடத்தில் குறிகேட்கிறவனும் உங்களுக்குள்ளே இருக்கவேண்டாம்” (உபா. 18:10, 11).

இஸ்ரவேலின் முதல் ராஜாவான சவுல் ஒரு கடினமான பாடத்தைக் கற்றுக்கொண்டான். மரித்த தீர்க்கதரிசியிடமிருந்து ஆலோசனைக் கேட்கவேண்டுமென்று அஞ்சனம்பார்க்கிற ஒருத்தியை தேடினான். அவளோ சாமுவேலை அல்ல, “சால்வையைப் போர்த்துக்கொண்டிருக்கிற ஒரு முதிர்ந்த வயதான மனுஷன் எழும்பி வருவதையே” (1சாமு. 28:14) பார்த்ததாக வேதாகமம் கூறுகிறது. மேலும் சவுலே அவரை சாமுவேல் என்று நினைத்துக்கொண்டான், ஆனால் அது அவரல்ல. இறுதியில் சவுல் “கர்த்தருக்குச் செய்த தன் துரோகத்தினிமித்தமும், அவன் கர்த்தரைத் தேடாமல் அஞ்சனம் பார்க்கிறவர்களைக் கேட்கும்படிக்குத் தேடினதினிமித்தமும் செத்துப்போனான்” (1 நாளாகமம் 10:13).

நாம் இப்படிப்பட்ட பழக்கங்களுக்கு உட்படக்கூடாதென்று தேவன் ஏன் இத்தனை கண்டிப்புடன் இருக்கிறார்? ஏனெனில், “ஒளியின் தூதனைப்போல் (2கொரி. 11:14) மாறக்கூடிய ஆற்றல்கொண்ட சாத்தானால் நாம் நேசிக்கக்கூடிய ஒருவரின் சாயலுக்கும் மாறமுடியும்” என்பதினாலேயே. மேலும்,

ஏவாள் மற்றும் சவுலைப்போல, சாத்தானால் நீங்கள் வஞ்சிக்கப்படுவதை தேவன் விரும்பவில்லை!

## 5 ஒவ்வொருவரும் உயிர்த்தெழுவோம் - ஒவ்வொருவரும்!

பிரபல நகைச்சுவை நடிகரும், மாபெரும் குடிகாரருமான று. ஊ. ∴ப்ல்டுஸ் என்பவர் தனது மரணப்படுக்கையில் இருக்கும்போது வேதத்தைப் படிக்க ஆரம்பித்தார். அவருடைய நண்பரான பில், “நீ ஒருபோதும் ஆலயத்திற்கு சென்றதில்லை, இப்பொழுது ஏன் இதைப் படிக்கிறாய்” என்று ஆச்சரியத்துடன் கேட்டார்.

மரித்துக்கொண்டிருந்த அவரோ, “நான் குறுக்குவழிகள் ஏதேனும் இருக்கிறதா என்று தேடுகிறேன்” என்றார்.

அதாவது ∴ப்ல்டுஸ் நியாயத்தீர்ப்பை சந்திக்க விரும்பவில்லை என்பது தெரிகிறது. ஆனால், “ஒரேதரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப்படைவதும், மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது…c (எபி. 9:27) என்று வேதம் கூறுகிறது. ஆம்! அது உண்மை! உயிரோடு இருக்கும் நீங்களும் மற்ற அனைவரும், பாவியோ பரிசுத்தவானோ நியாயத்தீர்ப்பில் நிற்க (2கொரி. 5:10) ஒருநாள் உயிர்த்தெழுந்தே ஆகவேண்டும்.

ஆனால் அதற்கடுத்து என்ன நடக்கவேண்டுமென்பதை நீங்கள் தீர்மானிக்கலாம்!

## 6 நீங்கள் தேர்ந்தெடுக்காதவரை மரணம் என்பது நித்தியமாக இருக்கவேண்டிய அவசியமில்லை!

“ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்பவேண்டுமென்பதே” (2பேதுரு 3:9) தேவனுடைய நோக்கமாகும். இங்கே, “கெட்டுப்போவது என்றால் இரண்டாம் மரணத்தில் மரிப்பது” என்று அர்த்தம்; (வெளி. 2:11) அதில் உயிர்த்தெழுதல் இல்லை. தேவனுடைய கிருபையை போக்கடிக்கிறவர்கள் ஒருநாள், “கொப்பும் வேரும் வைக்கப்படாமல்” எரிந்து சாம்பலாவார்கள் என்ற வேதம் கூறுகிறது (மல்கியா 4:1).

மனுக்குலம் அனைத்தும் சந்திக்கக்கூடிய நித்திரை என்ற மரணமல்லாமல், “இரண்டாம் மரணம்” என்பது நியாயத்தீர்ப்புக்குப் பின் நடைபெறுவதாகும். மேலும் அது நித்தியமானதாகும் (வெளி. 21:8ஐ படிக்கவும்).

## 7 ஆனால் நீங்கள் பரலோகத்தில் நித்தியமாக வாழலாம்!

“என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு; அப்படியில்லாதிருந்தால், நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன்; ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்போகிறேன்” (யோவான் 14:2) என்று இயேசு கூறினார். நீங்கள் இயேசுவை உங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டால், “உங்கள் பெயர்” பதித்த ஓர் இடம் நித்தியத்தில் உண்டு. இதைத்தான் நீங்களும் வாஞ்சிக்கிறீர்கள் என்றால், **AmazingFactsIndia.org** என்ற முகவரியில் எங்களை அணுகவும். இதில் நீங்கள் கிறிஸ்துவுக்குள் அதிகமாய் வளர இலவச இணையதள வேதபாடங்கள் உள்ளன.




## இன்னும் தெரிந்துகொள்ள விரும்புகிறீர்களா?

‘மரணத்திற்குப் பின் உள்ள வாழ்க்கையின் இரகசியங்கள்’ என்ற எங்கள் பத்திரிக்கையானது நீங்கள் மரிக்கும்போது என்ன நடக்கிறது என்பதை வேதாகம அடிப்படையிலான பதில்கள் மூலம் அறிவதற்கான மாபெரும் இடமாகும். உங்களுக்கானப் பிரதியை Bookstore.AFTV.in-ல் ஆர்டர் செய்யவும்.




நாம் மரித்தபின் நமக்கு என்ன நடக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ள, ‘மரித்தவர்கள் உண்மையாகவே மரித்துவிட்டார்களா?’ என்ற வேதபாடத்தை DeadSG.AFTV.in-ல் பதிவிறக்கம் செய்யுங்கள்.

---

AMAZING FACTS
India

AmazingFactsIndia.org

Post Box No 51
Banjara Hills, Hyderabad 500034
+91 916 916 4480 | Bookstore.AFTV.in